# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
## அசல் வழக்கு எண்.750/2019

2020–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 02–ம் நாள் புதன் கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி. தேன்மொழி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :பிச்சைப்பிள்ளை | தொழில் | : |
| தகப்பனார்/ கணவர் பெயர் | :கந்தசாமி பிள்ளை | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :ரஞ்சன்குடி | சமயம் | : |
| சாதி | : | வயது | :60/2020 |

**முதல் விசாரணை**

நான் மேற்படி வழக்கில் வாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். தாவா சொத்து குறித்து நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தை வா.சா.ஆ.1 ஆகவும், தாவா சொத்து குறித்து எனது பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகம் வா.சா.ஆ.2 ஆகவும், தாவா பி அட்டவணை சொத்திற்கு எனது பெயரில் ஏற்பட்ட கணணி சிட்டா வா.சா.ஆ.3 ஆகவும், எனது பெயரில் உள்ள கிஸ்து ரசீது வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.